**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**
**முன்னிலை : செல்வி.S.ஆக்னஸ் ஜெப கிருபா, எம்.எல்.,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவையாறு**

**2026-ம் வருடம் ஜூன் மாதம், 8-ம் நாள், திங்கள்கிழமை**

**சுருக்குமுறை வழக்கு எண்.418/2018**
(CNR No:TNTJ160001402018)

பவுல்மாணிக்கம்,
த/பெ. பீட்டர் பிரான்சிஸ்,
எண்.61, வெள்ளாளத்தெரு,
கீழத்திருப்பந்துருத்தி கிராமம்,
திருவையாறு வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம். ...குற்றமுறையிடுபவர்

..எதிர்..

செந்தில்நாதன்,
த.பெ. தேவராஜ்,
எண்.1, அஷ்டலெட்சுமி நகர்,
மருத்துவக் கல்லூரி சாலை,
தஞ்சாவூர். ...எதிரி

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 26.10.2018-ம் தேதி சுருக்குமுறை வழக்கு எண்.418/2018 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து, கடந்த இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. மதியழகன் M.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B. ஈஸ்வரன், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், புகார், புகார்தாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றைப் பரிசீலித்தும், எதிரி தரப்பிற்கு வாய்ப்பளிக்கப்பட்டும், எதிரி

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.08 19:40:46 +0530

தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டாமலும், இன்றுவரை என் ஆய்வில் வைத்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**தீர்ப்புரை**

எதிரி, மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப் பிரிவுகள் 138 மற்றும் 142–ன் கீழான குற்றத்தை செய்ததாக புகார்தாரரால் இந்த தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. புகார்தாரர் தாக்கல் செய்த புகாரின் சுருக்கம்:–**

புகார்தாரரிடம். எதிரி தான் நடத்தி வரும் Dhil and Dhil– Group of Company மூலம் Fund பெற்று மாத வட்டி செலுத்துவதாக சொல்லி அதற்கு Fund கொடுக்கச் சொல்லியதன்பேரில், புகார்தாரர் ரூ.6,00,000/–ஐ 19.03.2016 அன்று புகார்தாரரின் வீட்டில் எதிரி பெற்றுக்கொண்டார். புகார்தாரர் அதற்கான ரசீது கேட்டபோது, ரசீது தீர்ந்துவிட்டதால் பிரிண்ட் செய்ய கொடுத்துள்ளதாகவும், பின்னிட்டு தந்துவிடுவதாகவும் கூறியுள்ளார். பின்னர் ரசீதும் கொடுக்கவில்லை. புகார்தாரரும், அவரது மகனும் தொகையை எதிரியிடம் கேட்டபோது மொத்தமாக தரமுடியாது என்றும், எதிரி வங்கிக் கணக்கு வைத்துள்ள தஞ்சாவூர், மருத்துவக் கல்லூரி சாலை, சிட்டி யூட்டி யூனியன் வங்கியின் 000057, 000056, 000059 என்ற எண்கள் கொண்ட 3 காசோலைகளில் முறையே 29.03.2018, 29.04.2018, 29.05.2018 ஆகிய தேதியிட்டு பூர்த்தி செய்து கொடுத்து, அத்துடன் ஒரு உறுதிமொழி பத்திரமும் எழுதிக் கொடுத்துள்ளார்.

புகார்தாரர் அந்த காசோலையை கடந்த 06.04.2018–ம் தேதியன்று திருவையாறு கிளை கனரா வங்கியில் காசாக்க வேண்டி செலுத்தியுள்ளார். அந்த காசோலை போதிய பணம் இல்லை என்ற காரணம் கூறி வங்கியால்

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.08 19:40:52 +0530

திருப்பப்பட்டது. இதுபற்றி எதிரியிடம் 07.04.2018 அன்று நேரில் கேட்டபோது, 2 மாத கால அவகாசம் தேவைப்படுகிறது என்றும், 3 காசோலையினையும் 29.05.2018 அன்று கலெக்சனுக்கு போடும்படி சொன்னதன் பேரில், புகார்தாரர் 3 காசோலைகளையும் கடந்த 29.05.2018 அன்று புகார்தாரர் வங்கி கணக்கில் செலுத்தியபோது, 02.06.2018 அன்று எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டுள்ளது. அந்த காசோலை திருப்பப்பட்ட பின்னர், எதிரி பணம் எதுவும் இல்லாமல் மோசடி எண்ணத்துடன் அவரது காசோலையை கொடுத்துள்ளது தெரிந்து. புகார்தாரர் எதிரிக்கு கடந்த 02.07.2018ல் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்து பணத்தை கேட்டுள்ளார். எதிரி அறிவிப்பை பெற்றுக்கொண்டு, 16.07.2018 அன்று பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார். தொகையை எதிரி திரும்ப செலுத்தவில்லை. பணம் இல்லை என்று தெரிந்தும் புகார்தாரருக்கு திரும்ப கொடுக்க வேண்டிய கடன் தொகையை ஏமாற்றுவதற்காக பணம் இல்லாத தன் வங்கிக் கணக்கு காசோலையை கொடுத்து எதிரி புகார்தாரரை மோசடி செய்துள்ளார். எனவே, எதிரி செய்துள்ள மாற்றுமுறையாவணங்கள் சட்டப்பிரிவு. 138 மற்றும் 142-ன் கீழான குற்றத்திற்காக எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறும், புகார்தாரருக்கு இழப்பீடு வழங்குமாறும் புகார்தாரரால் இந்த தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட புகார்தாரரின் தனிப்புகாரும், பிரமாண வாக்குமூலமும் பரிசீலனை செய்யப்பட்டு, முதல் தோற்ற வழக்கு இருப்பதாக கருதப்பட்டு, மாற்று முறை ஆவண சட்டங்கள் பிரிவு.138 மற்றும் 142-ன் கீழான குற்றத்தை பொறுத்து வழக்கு

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.08 19:40:58 +0530

கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு வழக்காவணங்களுடன் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பின் வாதங்களை கேட்டும், குற்றத்தின் சாராம்சம் குறித்து எதிரிக்கு எடுத்துகூறி விளக்கி வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்துள்ளார். எனவே, அரசுதரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**3. தரப்பினர்களின் சாட்சி மற்றும் சான்றாவண விவரம்:—**

இந்நீதிமன்றத்தில் புகார்தாரர் தரப்பில் வழக்கை நிரூபிப்பதற்காக புகார்தாரர் **பு.சா.1**—ஆக விசாரணை செய்யப்பட்டு, **பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. பல்வேறு வாய்ப்பளிக்கப்பட்டும் எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் முன்னிலைப்படுத்தப்படுத்தப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. புகார்தாரர் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்.:—**

புகார்தாரரிடம் எதிரி கடனாக பெற்ற ரூ.6,00,000/—த்தை திரும்ப கொடுப்பதற்காக 29.03.2018, 29.04.2018, 29.05.2018 தேதியிட்ட எதிரி வங்கி கணக்கு வைத்திருக்கும் தஞ்சாவூர் சிட்டி யூனியன் வங்கி காசோலைகளை கொடுத்ததை, 06.04.2018—ம் தேதியன்று தனது வங்கியான திருவையாறு, கனரா வங்கி கிளையில் காசாக்க வேண்டி செலுத்தியபோது, போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டது பற்றி எதிரியிடம் புகார்தாரர் கேட்டு, எதிரி சொன்னதன்பேரில், 29.05.2018 அன்று வங்கியில் காசாக்க செலுத்தியபோது, அந்த காசோலைகள்

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.08 19:41:05 +0530

மீண்டும், வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று 02.06.2018 அன்று வங்கியால் திருப்பப்பட்டதால், புகார்தாரர் எதிரிக்கு கடந்த 28.06.2018–ல் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தும், அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிரி 16.07.2018 அன்று பதில் அறிவிப்பு மட்டும் கொடுத்து,. தொகையை எதிரி திரும்ப செலுத்தாததால், பணம் இல்லை என்று தெரிந்தும் புகார்தாரருக்கு திரும்ப கொடுக்க வேண்டிய கடன் தொகையான ரூ.2,00,000/–த்தை ஏமாற்றுவதற்காக பணம் இல்லாத தன் வங்கிக் கணக்கு காசோலையை கொடுத்து எதிரி புகார்தாரரை மோசடி செய்துள்ளார் .

**5.** புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து, கு.வி.மு.ச.பிரிவு.313(1)(ஆ)–ன் கீழ் எதிரியிடம் வினவியபோது, எதிரி அவற்றை பொய்சாட்சி என்றும், பொய்வழக்கு என்றும் பதில் கூறினார். எதிரியின் பதில் பதிவு செய்யப்பட்டன. பல்வேறு வாய்ப்பளித்தும், எதிரி தரப்பில் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரி தரப்பு சாட்சி விசாரணை நீதிமன்றத்தால் தாமாக முடிக்கப்பட்டது.

**6. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

(i) எதிரி மீதான மாற்று முறை ஆவணங்கள் சட்டம் பிரிவுகள்.138 மற்றும் 142–ன் கீழான குற்றம் புகார்தாரர் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

(ii) எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன? என்பதேயாகும்.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.08 19:41:11 +0530

**7. தீர்வு:–**

புகார்தாரருக்கு திரும்ப கொடுக்க வேண்டிய கடன் தொகையான ரூ.6,00,000/–த்தை ஏமாற்றுவதற்காக பணம் இல்லாத 29.03.2018, 29.04.2018, 29.05.2018 ஆகிய தேதியிட்ட தன் வங்கிக் கணக்குள்ள 3 காசோலைகளை கொடுத்து எதிரி புகார்தாரரை மோசடி செய்துள்ளார் என்றும், மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் கீழ் எதிரி தண்டிக்கப்பட வேண்டியவர் என்றும் புகார்தாரரால் தனிப்புகார் மற்றும் வாய்மொழி சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.

மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142–ன் கீழான குற்றத்தை பொறுத்த வரையில், மேற்கண்ட பிரிவின்படி, நபர் ஒருவர் சட்டப்படியான கடனுக்காக காசோலையை கொடுத்து அது திருப்பப்பட்டு, அதுகுறித்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டு, அறிவிப்பிலிருந்து 15 நாட்களுக்குள் காசோலை தொகை திரும்ப செலுத்தப்படாதபோது பிரிவு.138–ன் கீழான குற்றம் நடந்ததாக கொள்ளப்படும். இவ்வழக்கில் மேற்கண்ட நடைமுறை அனைத்தும் புகார்தாரரால் பின்பற்றப்பட்டது என்பது நீதிமன்றத்தில் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு.138–ன் கீழான நடைமுறையை புகார்தாரர் பின்பற்றியதன் மூலம் பிரிவு.138–ன் கீழான குற்றம் நிகழ்ந்துள்ளதாக முதல் தோற்றமாக தெரியவந்ததன் பேரில், புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்ட புகார் இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.08 19:41:17 +0530

எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பானை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி வழக்கு நடத்தி வந்துள்ளார்.

புகார்தாரர் தரப்பில் 29.03.2018–ம் தேதியிடப்பட்ட சிட்டி யூனியன் வங்கி, தஞ்சாவூர் கென்னடி சதுக்க கிளை 000057 என்ற எண் கொண்ட காசோலை பு.சா.ஆ.1 –ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதை பரிசீலனை செய்ததில், ரூ.2,00,000/–க்காக மேற்படி காசோலை புகார்தாரர் பெயருக்கு எதிரியால் வழங்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேற்படி காசோலையை புகார்தாரர் தனது வங்கி கணக்கில் காசாக்க 29.05.2018–ஆம் தேதி போட்டபோது பணம் இல்லை என்று மேற்படி காசோலை 02.06.2018 தேதி திருப்பப்பட்டது என்று வாக்குமூலத்தில் சொல்லப்பட்டு, வங்கி குறிப்பாணை–பு.சா.ஆ.2–ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பு.சா.ஆ.2–ஐ பரிசீலனை செய்ததில், "Funds insufficient" என்று அந்த காசோலை திருப்பப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

28.06.2018ஆம் தேதி எதிரிக்கு புகார்தாரரால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்ற சங்கதி வழக்கறிஞர் அறிவிப்பு – பு.சா.ஆ.3–ன் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டார் என்பது அஞ்சலக ரசீது மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டை–பு.சா.ஆ.4, 5–ன் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எதிரி புகார்தாரரிடமிருந்து கடன் பெற்றதற்கு காசோலை கொடுத்தது தொடர்பாக, 05.03.2018–ஆம் தேதி உறுதி மொழி பத்திரம் புகார்தாரருக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்பது புசா.ஆ.6–ன் மூலம் தெரியவருகிறது. மேலும் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.08 19:41:28 +0530

என்பது புசாஆ.7—ன் மூலம் தெரியவருகிறது. இவ்வழக்கு ஆவணங்களின்படி புகார்தாரருக்கு எதிரி ரூ.6,00,000/— கடன் கொடுக்க வேண்டும் என்பதும், அதில் ரூ.2,00,000/—த்திற்கு எதிரி, பு.சா.ஆ.1 — காசோலை கொடுத்துள்ளார் என்பதும், அதை புகார்தாரர் தனது வங்கி கணக்கில் வசூலுக்காக போட்டுள்ளார் என்பதும், மேற்படி காசோலை வங்கியில் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டுள்ளது என்பதும், புகார்தாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

வேறு எந்த வகையிலும் நிரூபித்தாலன்றி ஒவ்வொரு மாற்று முறை ஆவணமும் தகுந்த மறுபயனுக்காக எழுதிக் கொடுக்கப்பட்டது என்பது அனுமானிக்கப்பட வேண்டும் என்று மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு.118—ன் கீழ் சொல்லப்பட்டுள்ளது. மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு.139—ன் கீழ், வேறு எந்த வகையிலும் நிரூபிக்கப்பட்டாலன்றி காசோலையை வைத்திருக்கும் நபருக்கு மேற்படி காசோலை ஒரு சட்டபூர்வமான கடப்பாட்டுக்காக தான் கொடுக்கப்பட்டது என்று அனுமானிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு அனுமானங்களும் எதிரி தரப்பில் ஆட்சேபித்து பொய்ப்பிக்கப்படக் கூடியவை ஆகும்.

எதிரி தரப்பில், புகார்தாரருக்கு எதிரிக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்றும், எதிரி புகார்தாரரிடம் ரூ,20,000/— ரூ.10,000/—, ரூ.20,000/—ம் என மூன்று தவணைகளில் மொத்தம் ரூ.50,000/— கடனாக பெற்று அந்த கடனையும் திரும்ப செலுத்திவிட்டார் என்றும், எதிரி பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார் என்றும், பு.சா.ஆ.6 உறுதி மொழி ஆவணம் காவல் நிலையத்தில் வைத்து எதிரியை மிரட்டி பெறப்பட்டது என்றும், எதிரி

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.08 19:41:34 +0530

புகார்தாரருக்கு பணம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லை என்றும், புகார்தாரரிடம் குறுக்கு விசாரணையின்போது, எதிரி தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டு, அவை புகார்தாரரால் குறிப்பாக மறுக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சொல்லப்பட்டுள்ள மேற்படி ஆட்சேபனைகளை நிரூபிக்க வேண்டிய சுமை எதிரியை சாரும். வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிரி தரப்பில் மேற்படி சங்கதிகள் நிரூபணம் செய்யப்படவில்லை.

மேலும், எதிரியின் கையொப்பமிடப்பட்ட பு.சா.ஆ.1 – காசோலை தன்னுடையது அல்ல என்றோ, புகார்தாரரிடம் தான் கொடுக்கவில்லை என்றோ எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை. எனவே மேற்படி சங்கதிகளை உட்கிடையாக ஒப்புக்கொள்ளும் எதிரி தகுந்த சாட்சியங்களை முன்னிலைப்படுத்தி, புகார்தாரரிடமிருந்து எதிரி ரூ.50,000/– கடன் பெற்று அதையும் அவரிடம் திரும்ப கொடுத்துவிட்டதால், சட்டப்படியான கடனுக்கான மேற்படி காசோலை கொடுக்கப்படவில்லை என்றோ, காசோலை தொடர்பாக காவல் நிலையத்தில் புகார்தாரரால் புகார் கொடுக்கப்பட்டது என்றோ, அந்த புகாரில் போலிசாரால் மிரட்டி, எதிரியிடமிருந்து உறுதிமொழி ஆவணம் எழுதி பெறப்பட்டது என்றோ நிரூபிக்காததால், புகார்தாரரின் வழக்கு எதிரியால் பொய்பிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மிக முக்கியமாக, எதிரி சொல்வதுபோல் புகார்தாரரிடம் பெற்ற ரூ.50,000/–ஐ, எதிரி திரும்ப கொடுத்திருந்தால், மேற்படி தொகைக்காக கொடுக்கப்பட்டதாக சொல்லும் காசோலைகளை எதிரி திரும்ப பெற நடவடிக்கை எடுத்திருப்பார். மேலும், எதிரி சொல்வதுபோல், புகார்தாரர் காவல் நிலையத்தில் புகார் அளித்து, அங்கு போலிசாரால் மிரட்டப்பட்டு, எதிரி உறுதிமொழிப்பத்திரம் எழுதி

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.08 19:41:38 +0530

கொடுத்திருப்பின், உறுதிமொழி பத்திரம் 30.05.2018–ஆம் தேதி ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கு தாக்கல் செய்த 27.07.2018–ஆம் தேதிக்கு முன்போ அல்லது இந்த வழக்கிற்கு பின்போ அது குறித்த சட்ட நடவடிக்கையை எதிரி எடுத்திருப்பார். ஆனால், அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக எதிரி தரப்பில் நிரூபிக்காததும் இந்நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், நிரூபிக்கும் சுமை உடைய புகார்தாரர் தனது வழக்கை நிரூபித்துள்ளதாலும், வழக்கை மறுத்துரைத்து பொய்ப்பிக்க வேண்டிய எதிரியால் இந்த புகார்தாரரின் வழக்கு பொய்ப்பிக்கப்படாததால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு.138–ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரரால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, கு.வி.மு.ச.பிரிவு.255(2)–ன் கீழ் எதிரி குற்றவாளி என முடிவு செய்கிறது.

8. முடிவாக,

**1. மாற்று முறை ஆவணங்கள் சட்டம் பிரிவு.138–ன் கீழ் எதிரி குற்றவாளி என கு.வி.மு.ச.பிரிவு.255(2)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**2. எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு.255(2)–ன் கீழ் 6 மாத மெய்க்காவல் தண்டனையும், கு.வி.மு.ச.பிரிவு.357(3)–ன்கீழ் இழப்பீடாக ரூ.2,00,000/–ஐ (காசோலைக்கான தொகையான ரூ.2,00,000/–த்துடன் புகார்தாரருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்காக ரூ1,00,000/– சேர்த்து மொத்தம் ரூ.3,00,000/–) இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் புகார்தாரருக்கு எதிரி**

**கொடுக்க வேண்டுமென்றும், இழப்பீடை கொடுக்க தவறும்பட்சத்தில் எதிரி கூடுதலாக 2 மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பு அளிக்கப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026–ம்** ஆண்டு **ஜூன்** மாதம் **8–ம்** நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.08 19:41:49 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

**<u>புகார்தாரர் தரப்பு சாட்சி :–</u>**

பு.சா.1 – பவுல்மாணிக்கம் (புகார்தாரர்)

**<u>புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | |
|---|---|
| பு.சா.ஆ.1 | 29.03.2018 – சிட்டி யூனியன் வங்கி காசோலை எண்.000057 –அசல் |
| பு.சா.ஆ.2 | 01.06.2018– வங்கி குறிப்பாணை – நகல் |
| பு.சா.ஆ.3 | 28.06.2018 – வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல் |
| பு.சா.ஆ.4 | 28.06.2018 –அஞ்சல் ரசீது – அசல் |
| பு.சா.ஆ.5 | அஞ்சல் ஒப்புதல் அட்டை – அசல் |
| பு.சா.ஆ.6 | 05.03.2015 தேதியிட்ட உறுதிமொழி பத்திரம் அசல் |
| பு.சா.ஆ.7 | 18.07.2018 வழக்கறிஞர் பதில் அறிவிப்பு |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**–இல்லை.

**<u>குறிப்பு</u>**

எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இவ்வழக்கில் வழங்கப்பட்ட தண்டனையை அனுபவிப்பதற்காக, எதிரி மீது பிடி கட்டளை பிறப்பிக்கப்பட்டு, தஞ்சாவூர் மருத்துவக் கல்லுரி காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.08 19:41:54 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.